தினமலர்

# "உணவு உற்பத்தியை இரு மடங்காக்கணும்' வேளாண் பல்கலை துணைவேந்தர் பேச்சு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,01:17 IST

கும்பகோணம்: தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி, ஆடுதுறை கருத்தரங்கில், ""ஆராய்ச்சியாளர்கள், துறை அலுவலர்கள் ஆர்வத்துடன் செயல்பட்டு உணவு உற்பத்தியை இருமடங்காக்க வேண்டும்," என்று தெரிவித்தார். கும்பகோணம் அருகே உள்ள ஆடுதுறையில் செயல்பட்டு தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்திற்கு தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி நேற்று வருகை தந்து ஆய்வுப்பணிகளை மேற்கொண்டார்.ஆராய்ச்சி நிலையத்தில் காலநிலை மாற்றம், பாசனநீர் சிக்கனம், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், இயற்கை உர உற்பத்தி, விதை நுட்ப தொழில் நுட்பங்கள், இலை வழி உர மேலாண்மை மற்றும் ஆதார விதை உற்பத்தி போன்ற ஆராய்ச்சித்திடல்களை பார்வையிட்டு தக்க ஆலோசனை வழங்கினார்.தொழில்நுட்பத்திற்காக செய்யப்படும் ஆராய்ச்சி அனைத்தும் விவசாயிகளின் தற்போதைய மற்றும் எதிர்நோக்கும் அந்தந்த பகுதி பிரச்னைகளுக்கு ஏற்றவாறு செயல்திட்டம் தயாரித்து ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ள வேண்டும் என விஞ்ஞானிகளை கேட்டுக்கொண்டார்.தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தின்மூலம் உழவர்களுக்கு தரமான விதைகள் உற்பத்தி செய்து வழங்குவதுடன் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம், வேர் உட்பூசணம், நீலப்பச்சைப்பாசி மற்றும் அசோலா போன்ற உயிர் உரங்களும் ட்ரைக்கோடெர்மாவிரிடி, சூடோமோனாஸ் போன்ற நோய் எதிர் உயிர்களும் நெல்தண்டு துளைப்பானுக்கான இனக்கவர்ச்சி பொறி உற்பத்தி போன்றவைகள் தரமாக தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கி வருவதை பாராட்டினார். நீர்பாசன காலவாய்கள் மற்றும் குளம் குட்டைகளில் வளர்ந்துள்ள ஆகாயத்தாமரையை அகற்றி நல்ல உரமாக மாற்றுவதை பற்றியும் மற்றும் வேண்டாத மரங்களை அழிக்க மரங்கொல்லி மருந்து உற்பத்தி பற்றியும் பார்வையிட்டு விற்பனையை தக்க எச்சரிக்கையுடன் செய்திடவும் ஆலோசனை வழங்கினார்.பின் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளின் கருத்துக்கூட்டத்தில் துணைவேந்தர் கலந்துகொண்டார். நிலைய இயக்குனர் ஜெயராஜ் வரவேற்றார்.விவசாயிகள், நெல் சாகுபடிக்கு வேண்டிய இயந்திரங்கள் பற்றியும், சொட்டுநீர் பாசனக்கருவிகள் மானிய விலையில் கிடைத்திட கோரியும், மானிய விலையில் பிவிசி குழாய்கள் வழங்கிடவும் கேட்டுக்கொண்டனர்.

அதன்பின் துணைவேந்தர் ராமசாமி பேசியதாவது:விவசாயிகளின் கோரிக்கைகளை அரசுக்கு முறையாக தெரிவிப்பேன். கிராமங்கள் தோறும் பள்ளி இறுதி வகுப்பு முடித்த கல்லூரிக்கு செல்லாத இளைஞர்களை ஒருங்கிணைத்து பண்ணை இயந்திரங்கள் இயக்கவும், பராமரிப்பதற்கு தேவையான பயிற்சிகள் அளித்து பஞ்., யூனியன் தோறும் பண்ணை இயந்திர வாடகை மையங்கள் அமைத்திட செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.ஆராய்ச்சியாளர்களும், துறை அலுவலர்களும் ஆர்வத்துடனும், உத்வேகத்துடனும் பணியாற்றி விவசாயிகளின் பண்ணை வருமானத்தை மும்மடங்காக்கிடவும், நாட்டில் உணவு உற்பத்தியை இருமடங்காக பெருக்கவேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

## நெல்வரத்து அதிகரித்தும் அரிசி விலை குறையவில்லை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,22:25 IST

செங்குன்றம் : அறுவடை துவங்கியும் நெல் விலை குறையாததால், சென்னையில் அரிசி விலை உயர்ந்துவருகிறது.செங்குன்றம் நெல் சந்தைக்கு ஆவணி மாத அறுவடையால் நெல் வரத்து அதிகரித்துள்ளது.மாவட்ட நெல் வரத்து, நேற்றைய நிலவரப்படி பெரியபாளையம், ஊத்துக்கோட்டை, வடக்கு நல்லூர், பொன்னேரி, சின்னம்பேடு உள்ளிட்ட திருவள்ளூர் மாவட்ட பகுதிகளில் இருந்து, தினமும் 50 லாரிகள் மற்றும் 20 டிராக்டர்களில் நெல் கொண்டு வரப்படுகிறது. இது இன்னும் இரு வாரங்களுக்கு நீடிக்கும். அதற்குள் மாவட்டப் பகுதிகளில் அறுவடை முடிந்து விடும். தற்போது அதிக அளவு அதிசய பொன்னி (ஏடிடி-43. புதியது) ரூபாலி ஆகிய ரகங்கள் வருகின்றன. ஆந்திராவிலிருந்து, 10 முதல் 20 லாரிகளில் மட்டும் பி.பி.டி. எனப்படும் பாபட்லா பொன்னி ரக பழைய நெல் வருகிறது. செங்குன்றம் சந்தைக்கு வரும் நெல், 25 சதவீதம் மட்டுமே இங்கு விற்பனையாகிறது. மீதமுள்ளவை மதுரை, சங்கரன் கோவில், கள்ளக்குறிச்சி, புதுச்சேரி மற்றும் கர்நாடக தும்கூர் ஆகிய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. தயக்கம்மாவட்டப் பகுதிகளில் மூன்று வாரங்களுக்கு முன், அறுவடை துவங்கி இருந்தாலும், இப்போது தான் இங்கு நெல் வரத்து சூடு பிடித்துள்ளது. அதற்கு காரணம் வேலூர், ஆரணி, காஞ்சிபுரம் உள்ளிட்ட பிற மாவட்ட வியாபாரிகள், அறுவடை நடக்கும் பகுதிக்கே சென்று, நெல் கொள்முதல் செய்கின்றனர்.

சந்தை நிலவரப்படி கூடுதல் விலைக்கு நெல் வாங்கினால், அதை அரிசியாக்கி விற்கும் போது நஷ்டம் ஏற்படுவதாக, வியாபாரிகள் தெரிவித்தனர். இதனால் தான் அதிக விலை கொடுத்து, நெல் வாங்க வியாபாரிகள் தயங்குகின்றனர். அரிசி விற்பனையும் மந்தமாக உள்ளது. சொந்தமாக அரிசி ஆலை வைத்திருப்பவர்கள் அல்லது பெரிய வியாபாரிகள் மட்டுமே, செங்குன்றத்தில் நெல் வாங்கி வியாபாரம் செய்யும் நிலையில் உள்ளனர். ஆந்திராவிலும் அரிசி அலைகள் பெருகி வருவதால், அங்கிருந்து வழக்கமாக, சென்னைக்கு கொண்டு வரும் நெல் அளவு குறைந்து வருகிறது.

இதனால், திருவள்ளூர் மாவட்டப்பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும் அதிசய பொன்னி, ரூபாலி போன்ற ரக நெல் ரகங்களின் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.
மழைபொய்த்தது
வியாபாரிகள்கூறியதாவது:
மழையின்மையால் விவசா யத்திற்கு தேவையான, நீரைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உரம் விலை உயர்வால் விவசாய செலவு அதிகரித்துள்ளது. இதனால் நஷ்டத்தை விரும்பாத விவசாயிகள், உற்பத்தியை குறைத்து விட்டனர். நெல் விலை அதிகரித்துள்ளது. சென்னை சந்தைக்கு கொண்டு வருவதால், போக்குவரத்து செலவினங்களும் அதிகரிக்கிறது. வெளி மாவட்ட வியாபாரிகள், அறுவடை இடங்களிலேயே கொள்முதல் செய்துக் கொள்கின்றனர். தற்போது வெளிமாவட்ட வியாபாரிகள் வருகை குறைந்துள்ளதால் தான், செங்குன்றம் சந்தைக்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது. நெல் விலை உயர்வால் அரிசி விலையும் அதிகரித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் முதல் இந்நிலை தொடர்ந்து வருகிறது. வெளிநாட்டிற்கான அரிசி ஏற்றுமதியை தற்காலிகமாக தடை செய்தால், அரிசி விலை குறையும் வாய்ப்பு உள்ளது.இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**அழிவின் பிடியில் மருத்துவ குணம் வாய்ந்த அரிய பழங்கள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,05:41 IST

கருத்தை பதிவு செய்ய

குன்னூர்:நீலகிரியில் விளையும் மருத்துவ குணம் வாய்ந்த பழ வகை மரங்கள் அழிந்து வருகின்றன;"வனத்துறை சார்பில் இந்த மரங்களின் கன்றுகளை வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்,' என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.நீலகிரி வனப்பகுதிகளிலும், பழ தோட்டங்களிலும் மருத்துவ குணம் வாய்ந்த நாகம், தவிட்டு, விக்கி, பிளம்ஸ், ஊசி கிளைக்காய், பேரிக்காய், சீத்தா உட்பட பல பழங்கள் விளைகின்றன. இந்த பழங்கள் அந்தந்த சீசனின் போது, சிறு வன பொருட்கள் சேகரிப்பு குழுக்கள் மூலம் வனப்பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.நோய் நிவாரணி:இந்த பழங்களில் வைட்டமின், கால்சியம், சுண்ணாம்பு, நீர்சத்து ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளதால் பல நோய்களுக்கு இவை நிவாரணிகளாக இருந்து வருகின்றன. இவற்றின் மகத்துவம் அறிந்து, இவற்றை சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக நீலகிரிக்கே உரித்தான இவ்வகை பழ வகைகளின் வரத்து வெகுவாக குறைந்து விட்டது.நாகம், தவிட்டு, விக்கி, ஊசி கிளைக்காய் ஆகிய பழங்கள் தற்போதைய தலைமுறையில் பெரும்பாலானவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. இந்நிலையில்,

தற்போது பேரிக்காய், சீத்தா, பிளம்ஸ் ஆகிய சில வகை பழங்கள் மட்டுமே, குறைந்தளவில் விற்பனைக்கு வருகின்றன."இந்த வகை மரங்கள் அழிந்து வருவதே இதற்கு காரணம்,' என விவசாயிகள் மற்றும் ஆதிவாசிகள் தெரிவிக்கின்றனர்."இதன் காரணமாக, மருத்துவ குணம் வாய்ந்த இந்த பழ மரங்களை அழிவிலிருந்து பாதுகாக்க வனத்துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்,' என சில விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். ஊக்குவிப்பு அவசியம்:வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நாற்றங்கால்களில், இத்தகைய அரிய பழ மரங்களின் நாற்றுகளை நடவு செய்து வளர்த்து, விவசாயிகளுக்கு ஊடு பயிராக வழங்க வேண்டும்.தேயிலை தோட்டங்களில் ஊடு பயிராக வளர்க்க சில்வர் ஓக் மரங்கள் வழங்கப்படுகிறது. இதேபோல, மருத்துவ குணம் வாய்ந்த பழ மர கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கி, அவற்றை வளர்க்க ஊக்குவித்தால், அழிவின் பிடியிலிருந்து மருத்துவ குணம் நிறைந்த பழ மரங்களை பாதுகாக்கலாம்.

## சம்பா பருவத்திற்கு விவசாயிகளுக்கு தேவையான தரமான விதைகள் மானிய விலையில் விற்பனை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,02:46 IST

வானூர் : சம்பா பருவதற்கு விவசாயிகளுக்கு தேவையான தரமான சான்று விதைகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

வானூர் வேளாண்மை உதவி இயக்குனர் (கூடுதல் பொறுப்பு) கென்னடி ஜெபக்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வானூர் தாலுகாவில் 18 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா பருவத்தில் இந்தாண்டு விவசாயிகள் சம்பா சாகுபடி பணியை துவக்கியுள்ளனர். நெல் மகசூலுக்கு தரமான சான்று விதை பயன்படுத்தினால், அதிக மகசூல் பெறலாம். ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிலோ ஒன்றுக்கு ஐந்து ரூபாய் மானியத்தில் தரமான சான்று பெற்ற விதைகள் வழங்கப்படுகிறது. விவசாயிகள் சம்பா பருவத்திற்கு ஏற்ற ரகங்களை தேர்வு செய்து, தங்கள் நிலத்தில் தன்மைக்கு ஏற்ப ரகங்களை தேர்வு செய்யலாம்.

வெள்ளைப் பொன்னி மிக சின்ன ரகம் முந்தைய சம்பாவிற்கு உகந்தது. இதனை சாகுபடி செய்ய விவசாயிகள் சற்று மேட்டுப்பாங்கான நிலத்தை தேர்வு செய்ய வேண்டும். மழைநீர் தேங்கும் இடங்களை தவிர்க்க வேண்டும். கதிர் வரும் தருவாயில் மழைநீர் அதிகம் இருந்தால் சீக்கிரம் காய்ந்து மகசூல் இழப்பு ஏற்படும்.

எ.டி.டி., 39, சன்னரகம் ஆவணி முதல் புரட்டாசி வரை நாற்றுவிட உகந்த பருவம். கொ.43, மண்பாங்கு களர் உவர் நிலங்களுக்கு ஏற்ற ரகம். 135 முதல் 140 நாட்கள் பயிர். மழை மற்றும்

வறட்சியை தாங்கக்கூடியது. ஆவணி 15ம் தேதிக்கு மேல் நாற்றுவிட்டால் அதிக மகசூல் பெறலாம்.
எ.டி.டி., 37, பிந்திய சம்பா பட்டத்திற்கு ஏற்ற ரகம். புரட்டாசிமுதல் ஐப்பசி மாதம் வரை நாற்று விட்டு நடவு செய்யலாம். மழை வெள்ளத்தால் குறை வான பாதிப்பு ஏற்படும். எ.டி.டி., 45 சன்ன ரகம். பிந்திய சம்பா பட்டத்திற்கு ஏற்றது. புரட்டாசி முதல் ஐப்பசி மாதம் வரை நாற்று விட்டு நடவு செய்யலாம். 130 முதல் 140 நாட்கள். பி.பி.டி., சன்ன ரகம். சம்பா பட்டத்திற்கு ஏற்றது. 130 முதல் 140 வரை வயதுடையது.
மேற்கண்ட நெல் ரகங்களை விவசாய அதிகாரிகளின் ஆலோசனையுடன் பயிரிட்டு, விவசாயிகள் பயனடையுமாறு கென்னடி ஜெபக்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நிலக்கடலை ஏலத்துக்கு 500 மூட்டை வரத்து

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,07:28 IST

சேலம்: சேலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்துக்கு, 500 மூட்டை நிலக்கடலை வரத்தானது.
சேலம், லீபஜார் பகுதியில் உள்ள சேலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு, நேற்று, 500 மூட்டை நிலக்கடலை வரத்தானது. சமீபத்தில் பெய்த மழையால், நிலக்கடலை வரத்து அதிகரித்துள்ளது. அதே சமயம் விவசாயிகள் எதிர்பார்த்த விலையும் கிடைத்துள்ளது. 60 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை (ஈரம்) 1,609 ரூபாய் வரை விற்பனையானது. காய்ந்த நிலக்கடலை, 2,936 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரத்தை விட, இந்த வாரம் நிலக்கடலைக்கு அதிக விலை கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்று ஒரே நாளில், ஆறு லட்சம் ரூபாய்க்கு நிலக்கடலை விற்பனையானது. நேற்றைய ஏலத்தில், 1,200 மூட்டை மஞ்சள் வரத்தானது. குண்டு மஞ்சள் குவிண்டாலுக்கு, 6,700 ரூபாய்க்கு விற்பனையானது. விரலி மஞ்சள், 7,800 ரூபாய்க்கு விற்பனையானது. பனங்காலி மஞ்சள், 13 ஆயிரத்து 287 ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம், 60 லட்சம் ரூபாய் மதிப்புக்கு மஞ்சள் விற்பனை நடந்தது.

**கீழ்பவானியில் தண்ணீர் திறக்க வேண்டும் தமிழக விவசாயிகள் சங்கம் முதல்வருக்கு மனு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,07:22 IST

ஈரோடு: கீழ்பவானி பாசனப்பகுதியில் உள்ள பயிர்களை காக்க, தண்ணீர் திறக்க வேண்டும் என, தமிழக முதல்வருக்கு, தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் பெரியசாமி, மனு அனுப்பி உள்ளார்.

அவர் கூறியதாவது:கீழ்பவானி கால்வாய் பாசனத்துக்கு ஆகஸ்ட், 15 ம் தேதி தண்ணீர் திறப்பது வழக்கம். பருவமழை இன்றி, பவானிசாகர் அணைக்கு போதுமான நீர் வரத்து இல்லை.பாசனப் பகுதிகளில், ஏழு மாதமாக மழை இல்லாததால் நிலுவைப் பயிர்களான கரும்பு, தென்னை, மஞ்சள், வாழை போன்றவை ஆயிரக்கணக்கான ஏக்கரில் காய்கிறது. அணையில் தற்போது, 43 அடி நீர் உள்ளது. நீர்வரத்து, 3,000 கன அடியாக உள்ளது. மின் அணைகளில் இருப்பு நீர் போக, நீர் இருப்பு, ஆறு டி.எம்.சி.,யாகும். எனவே, ஈரோடு மாவட்ட விவசாயிகள், தொழிலாளர்கள் பிரச்னையை கவனத்தில் கொண்டு, கீழ்பவானி பாசனப் பகுதிக்கு தண்ணீர் திறக்க வேண்டும்.ழ்பவானி பாசனத்துக்காக நீர் இருப்பை கணக்கில் கொண்டு, முதல் போக நஞ்சை பயிருக்கு அல்லது இரண்டாம் போக பாசனத்துக்காக சிறப்பு தண்ணீர் தலா, 15 நாட்கள் என, 30 நாட்களுக்கு திறக்க உத்தரவிட வேண்டும். காவிரி பாசனத்துக்கு செப்டம்பர், 17 ம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்ற அறிவிப்பு, டெல்டா விவசாயிகளுக்கு இனிப்பான செய்தியாக உள்ளது போல, கீழ்பவானி பாசன நீர் திறப்பு குறித்து அறிவிப்பை முதல்வர் வெளியிட வேண்டும் என, அவர் கேட்டுக் கொண்டார்.

**நீரில்லாத வேளையில் விவசாயிகளுக்கு பரிசு அறிவிப்பு!**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,07:16 IST

கோபிசெட்டிபாளையம்: "தண்ணீரில்லாமல் வாடி இருக்கும் நேரத்தில், அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு பரிசு என்பது வேடிக்கையாக உள்ளது' என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பவானிசாகர் அணையின் மூலம் எல்.பி.பி., தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் ஆகிய பாசனங்கள் பயன்பெறுகின்றன. நான்கு பாசனங்களிலும், 2.5 லட்சம் ஏக்கரில் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. நடப்பாண்டு பருவ மழை பொய்த்ததால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்தது.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் முதல் போகத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல், பல்வேறு சிரமங்களுக்கு இடையில் காப்பாற்றப்பட்டு, அறுவடை பணியை துவங்கி உள்ளது. சுழற்சி முறை, திடீரென பெய்த மழை போன்றவை விவசாயிகளை பெரிய ஆபத்தில் இருந்து காப்பாற்றி உள்ளது.எல்.பி.பி.,

வாய்க்காலில் நஞ்சை பாசனத்துக்கு ஆகஸ்ட் 15 தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டு, டிசம்பர் 15 தேதி வரை விடப்படுகிறது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியால் நஞ்சை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. பருவ மழை மற்றும் பாசனப்பகுதியில் தண்ணீர் திறக்கப்படும் என்ற நம்பிகையில் சில விவசாயிகள் கரும்பு, வாழை, மஞ்சள் ஆகிய பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். பருவ மழையை பொறுத்தவரையில் ஒரு சில இடங்களை தவிர, மற்ற இடங்களில் பொய்த்து விட்டது. பாசனப்பகுதிகள் எங்கு பார்த்தாலும் வானம் பார்த்த பூமியாக காட்சி தருகிறது.

ஈரோடு மாவட்டத்தில், 40 சதவீத நிலங்கள் மானாவாரியாக உள்ளது. பருவ மழை, கிணற்று நீர் பாசனத்தை பொறுத்து பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. பருவ மழை பொய்த்ததால் மானாவாரி நிலங்களில் மேய்ச்சல் நிலங்களாக மாறி உள்ளது. சோளம், கேழ்வரகு, நிலக்கடலை போன்ற ஆடிப்பட்டத்தில் லேசாக பெய்த மழை நீரை பயன்படுத்தி சாகுபடி செய்த பயிர்கள், மழையில்லாமல் கருக துவங்கி உள்ளன.இவ்வாறான நேரத்தில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மாநிலத்தில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு ஐந்து லட்சம் ரூபாய் பரிசு, பதக்கம், நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மானாவாரி நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளில் உற்பத்தியை அதிகரிக்கும் விவசாயிகளுக்கு பரிசு வழங்கப்படும் என, தமிழக அரசு அறிவித்துள்ளது.

கீழ்பவானி பாசன ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி கூறியதாவது:அதிக மகசூல் பெற்றால் விவசாயிகளுக்கு பரிசு என்பது தேவையானது. ஆனால், செழிப்பான நேரத்தில் அறிவிக்க வேண்டிய அறிவிப்பு. இடம், பொருள் அறிந்து அறிவிப்பு வெளியிட்டு இருக்க வேண்டும். செழிப்பான நேரத்தில் அறிவித்திருந்தால் விவசாயிகள் பயன்பெறுவர். சம்பா சாகுபடி கேள்விக்குறியான நேரத்தில் இந்த அறிவிப்பு தேவையில்லாதது.இவ்வாறு அவர் கூறினார்.

**கோபியில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படுமா?**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,07:22 IST

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் நெல் அறுவடை துவங்கிவிட்டதால், நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என, விவசாயிகள் கோரியுள்ளனர்.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில், 10 ஆயிரம் ஏக்கர் வரை நெல் பயிரிடப்பட்டு அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது.நடப்பாண்டு, இதுவரை வெளிமார்க்கெட் வியாபாரிகள் எவரும் வரவில்லை. வெளி மார்க்கெட்டில் நெல்லை விற்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். கோபி பகுதியில் அவ்வப்போது மழை பெய்வதால், நெல் மணிகள் வீணாகும்

சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.சென்றாண்டு நெல் அறுவடைப் பணி துவங்கிய சில நாட்களிலேயே பாரியூர், நஞ்சகவுண்டன்பாளையம், ஒத்தக்குதிரை, கள்ளிப்பட்டி, காசிப்பாளையம், கூகலூர், டி.என்.பாளையம், கணபதிபாளையம் உள்ளிட்ட, ஒன்பது இடங்களில் நெல் கொள்முதல் திறக்க நடவடிக்கை எடுத்தார்.நடப்பாண்டு நெல் அறுவடைப் பணி துவங்கிய நிலையில், நெல் கொள்முதல் நிலையங்கள் பற்றிய பேச்சு அடிபடவில்லை. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் நெல் அறுவடை பணி தீவிரமடைந்து வருவதால், விரைவில் நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் கூறியதாவது:கோபி சுற்று வட்டாரத்தில் சென்றாண்டு, ஒன்பது நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. நெல் கொள்முதல் நிலையங்களிலும் நாள்தோறும், மூன்று லட்சம் ரூபாய்க்குதான், நெல் கொள்முதல் செய்ய பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரேநாளில் அதிகளவில் நெல் மூட்டைகள் கொண்டு வரும் போது, மறுநாள்தான் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிகளில், நெல் அறுவடை தீவிரம் அடைந்து வரும் நிலையில், கோபி சுற்று வட்டாரத்தில் விரைவில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும். அரசு நெல்கொள்முதல் நிலையங்களில் ஒரு பொதி, 2,500 முதல் 2,600 ரூபாய் வரை வாங்கப்படுவதால் விவசாயிகள் பயன்பெறுகின்றனர். ஆனால், வியாபாரிகள் ஒரு பொதி, 2,000 முதல், 2,100 ரூபாய் வழங்குகின்றனர். நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் நெல் கொள்முதல் நிலைங்களில் விற்பனை செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். ஆகையால், காலதாமதமின்றி நெல் கொள்முதல் நிலையம் திறக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தேயிலையில் கொப்புள நோய் பந்தலூர் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,01:08 IST

பந்தலூர் : பந்தலூர் பகுதியில் மாறி, மாறி வரும் காலநிலையால் தேயிலை செடிகளில் கொப்புள நோய் பரவி வருகிறது.
பந்தலூர் பகுதியில் கடந்த ஜூன் மாதம் முதல் பொய்த்துபோன பருவமழை, கடந்த சில நாட்களாக விட்டு, விட்டு பெய்துவருகிறது. இதனால் தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் மேகமூட்டத்துடன் கூடிய காலநிலையும் நிலவி வருவதால் பெரும்பாலான தேயிலை தோட்டங்களில் கொப்புள நோய் பரவி வருகிறது.
போதிய மழையின்மை, நோய் தாக்கம் ஆகிய காரணங்களால் தேயிலை விவசாயிகள் போதிய மகசூல் கிடைக்காத நிலையில், பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொப்புள நோய் பாதிக்கப்பட்ட விவசாய தோட்டங்களில் தேயிலை வாரிய அதிகாரிகள் நேரடியாக சென்று விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குவதுடன், கொப்புள நோயை கட்டுப்படுத்த தேவையான மருத்துவ ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

**எண்ணெய்வித்து விதை கிராம திட்ட பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,06:23 IST

தா.பேட்டை: தா.பேட்டை யூனியன் கரிகாலி பஞ்சாயத்தில் வேளாண்மைத்துறை சார்பில் 2012-2013 ம் ஆண்டுக்கான எண்ணெய்வித்து விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி நடந்தது. பயிற்சிக்கு தா.பேட்டை வேளாண் உதவி இயக்குனர் செல்வம் வரவேற்றார். பஞ்., தலைவர் நேரு தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குனர் சபாநடேசன் எண்ணெய்வித்து பயிர் மற்றும் உற்பத்தி தொழில் நுட்பம் குறித்து பேசினார்.உதவி வேளாண்மை அலுவலர் செந்தில்குமார், விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காட்டினார். பயிற்சியில் பகுதி விவசாயிகள் பலர் பங்கேற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் மனோகரன், ரேவதி, அசோக்குமார், ரவி ஆகியோர் செய்திருந்தனர்.

**கால்நடை ஆராய்ச்சி மையம் தென்னிலை மக்கள் விருப்பம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,06:18 IST

க.பரமத்தி: க.பரமத்தி யூனியன் விவசாயத்தில் மிகவும் பின்தங்கிய வறட்சிப் பகுதியாக உள்ளது. இப்பகுதியில் உள்ள தென்னிலை, பரமத்தி, கோடந்தூர், கார்வழி, அஞ்சூர், குப்பம், காருடையாம்பாளையம், முன்னூர், சூடாமணி உள்ளிட்ட 30 பஞ்சாயத்துகளில் 50 சதவீதம் பேர் விவசாயிகளாக உள்ளனர்.

இவர்கள் பெரும்பாலும் ஆடு, மாடு, எருமை போன்ற கால்நடைகளை வளர்த்து ஜீவனம் செய்து வருகின்றனர். இந்நிலையில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை குணப்படுத்தவும், அவற்றின் தன்மையை ஆராய போதுமான வசதி இப்பகுதியில் இல்லை.கால்நடைகளுக்கு ஏற்படும் நோயினால் அடிக்கடி கால்நடைகள் இறந்து விடுகின்றன. இந்நோய்களை கண்டறிய, க.பரமத்தி மற்றும் சுற்றுப்புற பகுதியில் வளர்க்கப்படும் சுமார் 50 ஆயிரம் கால்நடைகளின் நலன்கருதி தென்னிலை பகுதியில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சிறு தானிய பயிர் உற்பத்தி அதிகரிக்க சிறப்பு திட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,01:09 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் சிறு தானிய பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க சிறப்பு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

விதை சான்று உதவி இயக்குனர் வெங்கடேசன் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில், தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி விவசாயிகள் சிறு தானிய பயிர்களான ராகி மற்றும் சாமை ஆகிய பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். இந்த பருவத்தில், ராகியில் ஜி.பி.யு.28 மற்றும் கோ 14 ஆடைய ரகங்களையும், சாமையில் கோ 4 ரகமும் சாகுபடி செய்யலாம்.அடியுரமாக ஊட்டமேற்றிய தொழு உரம் இட வேண்டும். வரிசை விதைப்பில் பயிர் சாகுபடி செய்ய வேண்டும். உரிய நேரத்தில் களை எடுத்து, உரிய முறையில் மேலுரம் வேளாண் துறை சிபாரிசு செய்யும் உரங்களை இட வேண்டும். நுண்ணூட்ட சத்து கண்டிப்பாக இட வேண்டும்.சிறு தானிய பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க இன்சிப் திட்டத்தில் விவசாயிகளுக்கு செயல் விளக்க திடடல் அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இன்சிப் திட்டத்தில் விவசாயிகளுக்கு ஐந்து நாள் பயிற்சி வேளாண் அறிவியல் நிலையம் பாப்பாரப்பட்டியிலும், திட்ட செயல்பாடுகள் உள்ள வட்டார விவசாயிகளுக்கு வழங்கப்படும். விதைப்பண்ணை அமைத்து தரமான விதை உற்பத்தி செய்து வழங்கும் விவசாயிகளுக்கு கொள்முதல் விலையுடன் உற்பத்தி மானியம் கிலோ ஒன்றுக்கு 7 ரூபாய் 50 பைசா கூடுதலாக வழங்க வேளாண் துறையில் திட்டம் உள்ளது. இதனால், விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்.தர்மபுரி மாவட்டத்தில், சிறு தானிய பயிர்களில், 42 ஹெக்டேரில் விதை பண்ணை அமைத்து, 25 மெட்ரிக்கு டன் சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்ய அரசிடம் திட்டம் உள்ளது. எனவே தர்மபுரி மாவட்ட விவசாயிகள், வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி உதவி விதை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

**ஆய்க்குடியில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,04:09 IST

கடையநல்லூர்:ஆய்க்குடியில் இலவச சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது.கடையநல்லூர் அருகேயுள்ள ஆய்க்குடியில் தமிழக அரசின் இலவச சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முகாம் கம்பிளி கிராமத்தில் நடந்தது. முகாமில் கலந்து கொண்ட கால்நடைகளுக்கு சினை பரிசோனை, செயற்கை முறை கருவூட்டல், குடற்புழு நீக்கம் போன்ற

சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.முகாமில் ஆய்க்குடி கால்நடை டாக்டர் மகேஸ்வரி, ஆய்வாளர் லட்சுமி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் செல்லப்பா சிகிச்சைகளை மேற்கொண்டனர். டவுன் பஞ்., துணைதலைவர் செல்லப்பன், கவுன்சிலர்கள் மணிகண்டன், ஆறுமுகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.முகாமில் சிறந்த கிடேரி கன்றுகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

## தென்காசி விவசாயிகளுக்கு அட்மா பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,04:09 IST

கருத்தை பதிவு செய்ய

தென்காசி:தென்காசி வட்டாரத்திலுள்ள 50 விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் பயிற்சி முகாம் நடந்தது.தென்காசி வட்டாரத்திலுள்ள 50 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அட்மா திட்டத்தின் கீழ் மீன் வளம் சம்பந்தமான மாவட்ட அளவிலான பயிற்சி முகாம் மணிமுத்தாறு மீன் வளப்பண்ணையில் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமை வகித்து பேசும் போது, விவசாயிகள் வேளாண் சார்ந்த தொழில்களுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றார். மீன்வளத்துறை அலுவலர் ஜோதிபாசு மீன் உற்பத்தி, மீன் தொட்டிகள் அமைத்தல், அரசு வழங்கும் சலுகைகள் பற்றி விளக்கினார். அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஸ்டாலின் மீன் உற்பத்தி குறித்து விளக்கினார்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் அன்சாரி அலி, அட்மா திட்ட தொழில் நுட்ப அலுவலர்கள் கருப்பசாமி, மாரிராஜ் செய்திருந்தனர்.

## பாபநாசம் அணை நீர்மட்டம் உயர்வு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,03:46 IST

விக்கிரமசிங்கபுரம்:காரையார் மேற்கு தொடர்ச்சிமலை வனப்பகுதிகளில் மழை பெய்ததால் பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று சுமார் ஒரு அடி அதிகரித்தது. காரையாரில் உள்ள பாபநாசம் அணைப்பகுதியில் நேற்று 2 மி.மீ. அளவிற்கு மழை பெய்ததால் அணைக்கு வரும் நீரின் அளவு சற்று அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு 697.71 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. இதனால் நேற்று முன்தினம் 46.06 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று சுமார் ஒரு அடி அதிகரித்து 47.70 அடியாக உயர்ந்தது.அணையிலிருந்து 304.75 கனஅடிநீர் வெளியேறியது. சேர்வலார் அணைப்பகுதியில் 1

மி.மீ. மழை பெய்தது. அணையின் நீர்மட்டம் 63.61 அடியாக உயர்ந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 45.80 அடியாக உயர்ந்தது. காரையார் வனப்பகுதிகளில் நேற்று லேசான மழை பெய்ததால் அணையின் நீர்மட்டம் மேலும் சற்று உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

**குமரியில் தொடர் மழை நீடிக்கிறது அணைகளில் குறைந்த மழையளவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,01:35 IST

நாகர்கோவில்:குமரி மாவட்டத்தில் மழை தொடர்ந்து பெய்து வந்தாலும் அணைகளில் குறைந்த மழையளவே பதிவாகியுள்ளது. பேச்சிப்பாறை அணை 4.5 அடி நீர் மட்டத்தை மட்டுமே எட்டியுள்ளது.எப்போதும் இல்லாத வகையில் குமரி மாவட்டத்தில் மழை சீசன் ஏமாற்றத்தை கொடுத்தது. இந்நிலையில் கடந்த 10 நாட்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்றுவரை இந்த மழை தொடர்ந்தது. ஆங்காங்கே அதிக பட்சமாக 100 மி.மீ., மழை பெய்த பின்பும் அணைப்பகுதிகளில் 10 மி.மீ.,க்கு குறைவான மழை அளவே பதிவாகி வருகிறது. இதனால் எதிர்பார்த்த அளவில் அணைகளில் நீர்மட்டம் இல்லை. பேச்சிப்பாறை அணை அடைக்கப்பட்டுள்ள நிலையில் 4.50 அடி நீர்மட்டம் மட்டுமே உள்ளது. அப்பகுதியில் நேற்று 2.4 மி.மீ., மழை பதிவாகியுள்ள நிலையில் அணைக்கு உள்வரத்தாக விநாடிக்கு 11 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. பெருஞ்சாணி அணையில் 32.65 அடி தண்ணீர் உள்ளது. உள்வரத்தாக விநாடிக்கு 96 கனஅடி தண்ணீர் வரும் நிலையில் 53 கனஅடி தண்ணீர் வெளியேறிக்கொண்டிருக்கிறது. அப்பகுதயில் 3.4 மி.மீ., மழை மட்டுமே பதிவாகியுள்ளது. மாம்பழத்துறையாறில் 3.3, நாகர்கோவிலில் 7, பூதபாண்டியில் 5.4, சுருளோட்டில் 8.6, கன்னிமாரில் 2.4, பாலமோரில் 10, மயிலாடியில் 5.8, கொட்டாரத்தில் 11.4, அடையாமடையில் 10, கோழிப்போர்விளையில் 7, இரணியலில் 14.2, ஆனைக்கிடங்கில் 9, குளச்சலில் 12.4, குருந்தன்கோட்டில் 14.6, திருவட்டாரில் 12, முள்ளங்கினாவிளையில் 18, புத்தன்அணையில் 3.6 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

**மேட்டூர் அணை நீர்வரத்து 4,500 கனஅடியாக உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,01:37 IST

மேட்டூர்:மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று மாலை விநாடிக்கு, 4,500 கனஅடியாக அதிகரித்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், கர்நாடகாவில் உள்ள கபினி அணை நீர்வரத்து அதிகரித்தது. ஏற்கனவே, அணை நிரம்பியதால், நேற்று

முன்தினம் கபினியில் இருந்து விநாடிக்கு, 5,000 கனஅடி உபரி நீர் காவிரியில் திறக்கப்பட்டது. இதனால், நேற்று முன்தினம் விநாடிக்கு, 2, 901 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று மாலை விநாடிக்கு, 4,500 கனஅடியாக அதிகரித்தது. கூடுதல் நீர்வரத்து காரணமாக, நேற்று முன்தினம், 76.750 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று மாலை, 76.940 அடியாக உயர்ந்தது.

**மலர் சாகுபடி 17 லட்சம் டன்னாக உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,01:37 IST

புதுடில்லி:நாட்டின், மலர் சாகுபடி, சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது. குறிப்பாக கடந்த 2011-12ம் நிதியாண்டில் மலர் உற்பத்தி 17 லட்சம் டன்னை தாண்டியுள்ளது என, மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் ஹரிஷ் ராவத், பார்லிமென்டில் தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது:

நாட்டில், மேற்கு வங்கம், கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரா, ஒடிசா, உத்தரபிரதேசம், ஹரியானா, டில்லி, தமிழகம், காஷ்மீர், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில், மலர் சாகுபடி அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. இம்மாநிலங்களில், ரோஜா மலர்கள், மஞ்சள் வண்ண பூ, ஆர்கிட், சாமந்தி, கனகாம்பரம், அலரி, சம்பங்கி, மல்லிகை உள்ளிட்ட பல்வேறு வகையான மலர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

சென்ற 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் பல்வகை பூக்கள் உற்பத்தி, 17.14 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய நிதியாண்டில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, (10.31 லட்சம் டன்) 66 சதவீதம் அதிகமாகும்.

இதே நிதியாண்டுகளில், காம்புடன் கூடிய கொய் மலர்கள் மற்றும் ரோஜா மலர்கள் உற்பத்தி, 690.27 கோடி என்ற எண்ணிக்கையில் இருந்து, 746.77 கோடியாக அதிகரித்துள்ளது. கொய் மலர்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

வாராந்திர பகுதி » விவசாய மலர் ( From செப்டம்பர் 05,2012 To செப்டம்பர் 11,2012 )

**மதுரையில் கிணற்றுப்பாசனத்தில் நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,00:00 IST

மதுரையில் விவசாயிகள் அணைக்கட்டு பாசனம் கிடைக்காத சூழ்நிலையில் நெல் சாகுபடியை கிணற்றுப்பாசனம் கிடைக்கக்கூடிய நெடுங்குளம், சோழநேரி, தேனூர், திருபுவனம் மற்றும் சோழவந்தான் என்ற இடங்களில் செய்கிறார்கள். சில நேரங்களில் கிணற்றுநீர் சற்று குறைந்துவிடுவதும் உண்டு. மதுரை விவசாயிகள் துணிவே துணை என்ற நம்பிக்கையில் சோதனையிலும் சாதனை படைக்கும் நெல் ரகங்களை சாகுபடி செய்கின்றனர். மதுரை

விவசாயிகள் ஜே-13 என்ற 100 நாள் நெல் ரகத்தினை சாகுபடி செய்கிறார்கள். இந்த ரகத்திற்கு செழிப்பைக் கொடுக்க வயலுக்கு கணிசமான அளவு மக்கிய தொழு உரம் இடுகின்றனர். பயிர் வரிசைகளின் இடைவெளிகளிலும் உயிர் உரங்கள், உலர்ந்த தொழு உரக் கலவைகள் இடப்படுகின்றது. உடனே பயிர் வரிசை இடையில் களையெடுக்கும் கருவிகளை உபயோகிக்கின்றனர். தண்ணீர் தட்டுப் பாடு ஏற்பட் டால் இந்த ரகம் வறட்சியைத் தாங்கிக் கொள்கிறது.

நடவின் சமயம் 10 கிலோ பொடி செய்யப் பட்ட ஜிங்க் சல்பேட்டினை இடுகின்றனர். நடவு நட்ட 15 ம் நாள் யூரியா 25 கிலோ அளவினை 5 கிலோ வேப்பம் புண்ணாக்குடன் கலந்து ஒரு இரவு வைக்கப்பட்டு மறுநாள் வயலுக்கு இடப்படுகின்றது. பாஸ்போ பாக்டீரியா தொழு உரத்தோடு கலந்து வயலுக்கு இடப்படுகின்றது. விவசாயிகள் செய்யும் பணிகளால் குறிப்பாக பயிருக்கு திறமையாக களை எடுப்பதால் வேர் வளர்ச்சி ஊக்கப்பட்டு பயிர் அதிக அளவில் தூர்கள் பிடிக்கின்றன. தூர்களில் திரட்சியான கதிர்களும் பிடிக்கின்றன.

ஜே-13 பயிர் வயலில் 75 நாட்கள் தங்கி இருந்து, பயிர் நாற்றுவிட்ட 100 வது நாளில் அறுவடைக்கு வந்துவிடுகின்றது. பயிர் சாகுபடிக்கு ரூ.11,000 லிருந்து 12,000 வரை விவசாயிகள் செலவு செய்கின்றனர். 32 மூடை மகசூல் எடுக்கின்றனர். இதன் மதிப்பு சுமார் ரூ.20,800 இருக்கும். ஏக்கரில் ரூ.10,000 வரை லாபம் எடுக்கின்றனர். ஜே-13 நெல் மிக சன்னம். இதில் அரிசி வெண்மையாக இருக்கும். இட்லி, தோசை போன்ற பலகாரங்கள் செய்ய மிகவும் ஏற்றதாக உள்ளது. எல்லா வற்றிற்கும் மேலாக பொரி செய்வதற்கு ஏற்ற ஜே-13 நெல்லினை வியாபாரிகள் விரும்பி வாங்குகின்றனர். இந்த ரகத்தில் கணிசமான அளவு வைக்கோல் கிடைக்கின்றது. விவசாயிகள் ஜே-13 ரகத்தில் நல்ல பலன் அடைவார்கள்.

நெல் சாகுபடியில் நெல் மகசூலோடு வைக்கோல் மகசூலும் முக்கியமானது. நமது நாட்டில் கறவை மாடுகள், கன்றுகள், வண்டிகளை இழுக்கும் வண்டிமாடுகள் போன்றவைகள் உள்ளன. இவைகளுக்கு தவிடு, புண்ணாக்கு கொடுத்தாலும் அவைகளின் வயிறு நிரம்ப அதிக அளவு வைக்கோலும் அவசியம். வைக்கோல் பஞ்சு போல் இருக்கும். ஜே-13 ரகத்தில் வைக்கோல் அதிக அளவு கிடைப்பதோடு அதன் விலை மற்ற ரகங்களின் வைக்கோலின் விலையைவிட சற்று அதிகமாகும். சாகுபடியில் ஒரு சில ரகங்களை குறிப்பிட்ட பட்டத்தில்தான் சுலபமாக சாகுபடி செய்ய முடியும். ஆனால் ஜே-13 ரகத்தை எல்லா பட்டங்களிலும் சாகுபடி செய்யலாம். ஆபத்தில் உதவக்கூடிய ஜே-13 ரகம் விவசாயிகளை சோதனை காலங்களில் காப்பாற்றுகின்றது. ஆற்காடு கிச்சடி என்ற ரகம் பல வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இருப்பினும் இந்த ரகத்தை விவசாயிகள் விதை கிடைத்தால் தொடர்ந்து சாகுபடி செய்கிறார்கள். 100 நாள் ரகம் ஜே-13 ம் பல வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பினும் விவசாயிகள் இதை விடாமல் சாகுபடி செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,00:00 IST

**வரகுசாகுபடி**

வரகு பயிர் இந்தியாவில் சுமார் 3000 வருடங்களாக பயிரிடப்பட்டு வருகிறது. குறு தானியப் பயிர்களிலேயே இது நீண்ட வயதுடையது (125-130 நாட்கள்). கடும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. தமிழகத்தில் இப்பயிர் ஆழமற்ற மண் அமைப்புள்ள மாவட்டங்களான கடலூர், பெரம்பலூர், விருதுநகர், விழுப்புரம், மதுரை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 5930 எக்டரில் பயிரிடப்பட்டு 8805 டன் தானிய உற்பத்தி பெறப்படுகிறது. சராசரியாக ஒரு எக்டருக்கு 1485 கிலோ தானியம் கிடைக்கிறது. விலை ரூ.15/ கிலோ. கோ.3 என்ற வரகு ரகம் 120 நாட்களில் சராசரியாக எக்டருக்கு 1200 கிலோ தானிய விளைச்சல் தரவல்லது. ஏ.பி.கே.1 என்ற ரகம் 100-110 நாட்களில் 2000 கிலோ தானிய விளைச்சல் கொடுக்கிறது. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இந்த இரண்டு ரங்களும் பயிரிட ஏற்றவை. மானவாரியாக வரகு சாகுபடி செய்யப்படுவதால் தென்மேற்கு பருவமழை அதிகமாகப் பெறப்படும் மாவட்டங்கள் ஆடிப்பட்டத்திலும், வடகிழக்கு பருவமழை அதிகமாகப் பெய்யும் மாவட்டங்களில் புரட்டாசிப் பட்டத்திலும் விதைப்பு செய்வது நல்லது.

வரகு பொதுவாக தனிப்பயிராகவே பயிரிடப் படுகிறது. சில சமயங்களில் இத்துடன் ராகி (அ) பச்சைப்பயறு (அ) உளுந்து (அ) துவரை (அ) எள் (அ) மக்காச்சோளம் (அ) கடலை போன்ற பயிர்களுடன் 2:1 அல்லது 1:1 என்ற விகிதத்தில் ஊடுபயிராகவும் பயிரிடப்படுகிறது.

வரகுப்பயிரை துவரை அல்லது அவரை போன்ற பயறுவகைப் பயிர்களுடன் 8 து2 வரிசை என்ற விகிதத்தில் ஊடுபயிர் செய்வதால் மண்வளத்தைக் காப்பதுடன் அதிக லாபமும் பெறலாம்.

நிலத்தை நல்ல முறையில் உழுது தயார் செய்தால் சிறிய விதையாக இருக்கும் வரகு முளைத்து வெளிவர 5 நாட்கள் ஆகும். களைகளின் பாதிப்பும் குறையும். இரண்டு அல்லது மூன்று இடைஉழவு செய்வதால் களைகள் கட்டுப்படும்.

அசோஸ்பைரில்லம் 600 கிராம், 600 கிராம் பாஸ்போ பாக்டீரியா (அ) 600 கிராம் அசோபாஸ் நுண்ணுயிர் உரங்களை ஒரு எக்டருக்கான விதையுடன் கலந்து விதைநேர்த்தி செய்து பின் விதைப்பு செய்ய வேண்டும். ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் கார்பன்டசிம் (அ) திரம் கலக்க வேண்டும். ரசாயனப் பொருட்களைக்கொண்டு விதைநேர்த்தி செய்வதாக இருந்தால் முதலில் அவற்றுடன் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். பின் விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக நுண்ணுயிர் கலவையுடன் சேர்க்க வேண்டும்.

விதைக்கும்முறை

பொதுவாக கைத்தெளிப்பு முறையில் விதைக்கப்படுகிறது. எக்டருக்கு 15 கிலோ விதை தேவைப்படும். ஆனால் பயிரின் வளர்ச்சி ஒரே சீராக இருக்காது. விதைப்பான் கொண்டு வரிசை விதைப்பு செய்தால் அதிக பரப்பளவில் மண் ஈரம் காயும் முன்பே விதைக்கலாம். இம்முறையில் 10 கிலோ விதை போதுமானது. விதையை விதைக்கும்போது 2.5 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 22.5 செ.மீ. இடைவெளியும், செடிக்குச்செடி 10 செ.மீ. இடைவெளியும் இருக்க வேண்டும். ஒரு எக்டருக்கு 12.5 டன் மக்கிய தொழு உரம் கடைசி உழவின்போது பரப்பி பின் உழவேண்டும். இந்த தொழு உரத்துடன் 10 பொட்டலம் அசோஸ்பைரில்லம், 10 பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா உரங்களைச் சேர்த்து இடலாம். மண் பரிசோதனை முறைக்கு ஏற்ப உரம் இடவேண்டும். அல்லது எக்டருக்கு 44:22 கிலோ தழை, மணி சத்துக்களை இடவேண்டும். விதைக்கும் போதே அடியுரமாக மணிச்சத்து உரத்தை இடவேண்டும். தழைச்சத்தை பாதி அளவு இட்டு மீதமுள்ளதை மேலுரமாக விதைத்த 35-40 வது நாளில் முதல் களைக்குப் பின்னர் இடலாம். வரிசை விதைப்பு செய்திருந்தால் 2- 3 முறை இடை உழவு செய்து, பின் ஒரு முறை கைக்களை எடுக்க வேண்டும். கைத்தெளிப்பு முறையில் விதைத்திருந்தால் இடைஉழவு செய்ய இயலாது. எனவே பயிர் விதைத்த 15 ம் நாள் மற்றும் 40 ம் நாள் கைக்களை எடுக்க வேண்டும். களை எடுத்தவுடன் 22.5 செ.மீ. து 10 ச.மீ. இடைவெளிவிட்டு பயிர்களைக் கலைத்துவிட வேண்டும். கலைத்த பயிர்களைக் கொண்டு பயிர் இல்லாத இடத்தில் இடைநடவு செய்யலாம்.

தேவையான அளவு மண்ணில் ஈரப்பதம் இல்லை என்றாலோ (அ) நல்ல பரவலாக தேவையான அளவு மழைப்பொழிவு இல்லை என்றாலோ பண்ணைக் குட்டைகளில் சேமிக்கப்பட்ட மழைநீரைப் பயன்படுத்தி தெளிப்பான் கொண்டு தெளித்து காப்பாற்றலாம். தக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து மணிக்கரிப்பூட்டை நோய், குருத்து ஈ தாக்குதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். கதிர்கள் நன்கு காய்ந்து முடித்தவுடன் அறுவடை களத்தில் காயவைத்து அடித்து தானியங்களைப் பிரித்தெடுக்க வேண்டும். நன்கு சுத்தம் செய்து சேமித்து வைக்க வேண்டும். வரகிலிருந்து சாதம், இட்லி, தோசை, உப்புமா, கூழ், பச்சடி போன்ற சத்துமிக்க உணவுப் பண்டங்கள் தயாரிக்கலாம்.

**(தகவல்:** முனைவர் சுப்பிரமணியன், அ.நிர்மல்குமார், வெ.வீரபத்திரன், சிறுதானியத்துறை, த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. 0422-245 0507)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## நெற்பயிரைத்தாக்கும் இலைச்சுருட்டுப்புழு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2012,00:00 IST



நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளில் முக்கியமானது இலைச்சுருட்டுப்புழு அல்லது இலை மடக்குப்புழுவாகும். சமீப காலங்களில் இதன் தாக்குதல் முக்கியமாக உயர் விளச்சல் ரகங்களில் அதிக மாகக் காணப்படுகின்றது. தமிழகத்தில் மட்டுமல்லாது நெல் பயிரிடப்படுகின்ற அனைத்து மாநிலங்களிலும், எல்லாப் பருவங்களிலும் இதன் தாக்குதல் காணப் படுகின்றது. கோடைப் பயிரில் தாக்குதல் சிறிதளவு குறைந்து காணப்படுகின்றது. முக்கியமாகப் புரட்டாசி முதல் தை மாதம் வரை இதன் தாக்குதல் மிக அதிகமாக இருக்கும்.

### தாக்குதல் ஏற்படுத்தும் விதம்:

தாய் அந்துப்பூச்சிகள் இடுகின்ற முட்டைகளில் இருந்து வெளிவரும் புழுக்கள் இலைகளை நீளவாட்டில் மடித்து சேதப்படுத்துகின்றது. இவ்வாறு சுருட்டப்பட்ட இலைச் சுருள்களுக்குள் புழுக்கள் இருந்துகொண்டு பச்சையத்தைச் சுரண்டி உண்பதால் இலைகளில் சேதம் அதிகமாகிறது. தாக்கப்பட்ட இலைகள் வெளிறித் தோன்றுவதுடன் பயிரின் ஒளிச் சேர்க்கை குறைந்து வளர்ச்சி குன்றிவிடுகிறது. வளர்ந்த பயிர்களிலும் புடைப்பருவத்திலும் தாக்குதல் ஏற்படுவதாலும் கண்ணாடி இலை பாதிக்கப்படுவதாலும் மகசூல் வெகுவாகக் குறைகிறது. வயல்களில் இலைகள் பச்சையம் சுரண்டப்பட்டு வெள்ளை வெள்ளையாகக் காணப்படும்.

### மேலாண்மைமுறைகள்:

* பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டுமே உரம் அளிக்க வேண்டும்.
* இலைச் சுருட்டுப் புழுவின் அந்துப்பூச்சிகள் இரவு நேரத்தில் வெளிச்சத்திற்கு ஈர்க்கப்

படுகின்றன. எனவே முன்னிரவு நேரங்களில் விளக்குப் பொறிகளுக்குக் கவரப்படுகின்ற பூச்சிகளின் எண்ணிக்கையைக் கணித்து, தேவைப்பட்டால் பூச்சிக் கொல்லிகளை உபயோகிக்கலாம்.

* தேவைக்கு ஏற்ப தழைச்சத்து இட்டும் இப்பூச்சி அதிகமாகத் தோன்றும் இடங்களில் ரசாயன உரங்களைத் தவிர்த்தும் இப்பூச்சியின் சேதத்தைக் குறைக்கலாம். தழைச்சத்தின் தேவையை தொழு உரம் அல்லது பசுந்தாள் உரமாக இடுவதன் மூலம் இப்பூச்சியின் பெருக்கம் தவிர்க்கப்படுகிறது.

* டிரைக்கோகிரம்மா போன்ற முட்டை ஒட்டுண்ணிகளும், பிராக்கிமிரியா, ஜேன்தோபிம்ப்ளா போன்ற கூட்டுப் புழு ஒட்டுண்ணிகளும் கோனியோசஸ், அப்பாண்டிலஸ் போன்ற புழுப்பருவ ஒட்டுண்ணிகளும் இப்புழுக்களைத் தாக்குகின்றன. முட்டை ஒட்டுண்ணி டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் எக்டருக்கு 5 சி.சி. என்ற அளவில் நட்ட 37, 44 மற்றும் 51ம் நாட்களில் விடவேண்டும்.

* பயிர் வளர்ச்சிக் காலத்தில் பத்து சத இலைச்சேதம், பூக்கும் தருணத்தில் கண்ணாடி இலைகளில் ஐந்து சத நிலையை அடையும்போதும் எக்டருக்கு மோனோகுரோட்டோபாஸ் 1000 மி.லி., புரோபனோபாஸ் 1000 மி.லி., குளோர்பைரிபாஸ் 1250 மி.லி., வேப்பெண்ணெய் 3 சதம் மற்றும் 5 சத வேப்பங்கொட்டை பருப்புச்சாறு (25 கிலோ பருப்பு) அல்லது நிம்பிசிடின் 500 மி.லி. இவற்றில் ஒன்றினைத் தெளித்து சிறந்த முறையில் கட்டுப்படுத்தலாம்.

முனைவர் சு.இருளாண்டி மற்றும் முனைவர் க.இறைவன், வேளாண்மை அறிவியல் நிலையம், பேச்சிப்பாறை, கன்னியாகுமரி-629 161.

தினமணி

நெல்லையில் கால்நடை தொழில்நுட்பக் கண்காட்சி

First Published : 04 Sep 2012 02:29:14 PM IST

நாமக்கல், செப்.3: மண்டல அளவிலான கால்நடை தொழில்நுட்பக் கண்காட்சி திருநெல்வேலியில் செப்டம்பர் 8 முதல் 10-ம் தேதி வரை 3 நாள்கள் நடைபெறுகிறது.

இதுகுறித்து, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் கே.ஏ.துரைசாமி திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் கால்நடை தொழில்நுட்ப கண்காட்சி திருநெல்வேலியில் செப்டம்பர் 8, 9, 10 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இந்தக் கண்காட்சியில் 60-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டு கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கால்நடைகளுக்கான தீவனம், பால் மற்றும் இறைச்சியில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு குறித்த நவீன அறிவியல் தொழில் நுட்பங்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன், அவை குறித்த விளக்கங்களுடன் கூடிய சுவரொட்டிகள், மடிப்பிதழ்கள், துண்டு பிரசுரங்கள், குறுந் தகடுகள், தொலைக்காட்சி படங்கள் மற்றும் புத்தகங்களும் வழங்கப்பட உள்ளன.

தவிர, கண்காட்சியில் கண்ணைக் கவரும் அலங்கார மீன் வகைகள், முயல் இனங்கள், பலவித கோழி மற்றும் ஆட்டு இனங்கள் வைக்கப்படுவதுடன், பண்ணையாளர்களுக்குத் தேவையான பசுந் தீவன விதைகள் மற்றும் விதை கரணைகளும் இந்தக் கண்காட்சியில் விற்பனை செய்யப்பட உள்ளன.

கால்நடை வளர்ப்போர், தமிழக அரசின் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள், புதிதாக கால்நடை, கோழி மற்றும் மீன் வளர்க்க விரும்புவோர் மற்றும் கால்நடை மருத்துவம் குறித்து அறிந்து கொள்ள விரும்பும் பள்ளி மாணவர்கள், கால்நடை சார்ந்த தொழில்திறன் மேம்பாட்டு பயிற்சி, சுய வேலைவாய்ப்பு பயிற்சி பெற விரும்புவோர் என அனைத்து தரப்பினரும் இந்தக் கண்காட்சியில் பங்கேற்று பயன்பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபடலாம்'

First Published : 04 Sep 2012 12:36:54 PM IST

தஞ்சாவூர், செப். 3: தற்போது பெய்துள்ள மழையைப் பயன்படுத்தி, விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபடலாமென தஞ்சை மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தஞ்சை மாவட்டத்தில் நிகழாண்டில் நிலத்தடி நீரைக் கொண்டு, 21 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே, நிகழாண்டில் விடுபட்ட 20 ஆயிரம் ஹெக்டேர் குறுவை பரப்பையும் சேர்த்து 1.25 லட்சம் ஹெக்டேரில் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யப்பட வேண்டும்.

மேட்டூர் அணை பாசனத்திற்காக செப். 17-ம் தேதி திறக்க முதல்வர் அறிவித்துள்ளார். அவ்வாறு திறக்கப்படும் தண்ணீர் கல்லணை வந்தடைந்து வயல் மட்டத்திற்கு செப்டம்பர் இறுதியில் சென்றடையும். தற்போது தென்மேற்குப் பருவமழை சராசரி அளவை விட குறைவானதாலும், அடுத்து வரும் வடகிழக்குப் பருவ காலத்தில் விடுபட்ட மழையையும் சேர்த்து கிடைப்பதற்கு நிறைய வாய்ப்பு உள்ளது.

எனவே, 1.25 லட்சம் ஹெக்டேர் பரப்பினையும், சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு அக்டோபர் 20-ம் தேதியில் வேரூன்றி வளர்ச்சி பருவத்திலிருந்தால்தான் அடைமழை வெள்ளத்திலிருந்து பயிரைக் காப்பாற்ற முடியும். மேலும், சம்பா பயிர் நவம்பர் மாத அடைமழையிலும் பூக்கும் தருணத்திலும் இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே, இன்றிலிருந்து செப்டம்பர் முதல் வாரம் வரை 150 நாள்கள் வயதுடைய நீண்ட கால ரகங்களை விதைக்கலாம். செப்டம்பர் 2-ம் வாரத்திலிருந்து அக்டோபர் முதல் வாரம் வரையில் 135 நாள் வயதுடைய மத்திய கால ரகங்களை விதைக்கலாம்.

தற்போது மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதனைப் பயன்படுத்தி உழவு செய்துள்ள வயல்களில் உடனடியாக நீண்டகால ரகங்களை கொண்டு நேரடி நெல் விதைப்பு செய்திடலாம். இதுவரை உழவு செய்யாத வயல்களை தற்போதுள்ள ஈரத்தை பயன்படுத்தி, உழவு செய்து அக்டோபர் முதல் வராம் வரை மத்திய கால ரகங்களை தெளிக்கலாம்.

குறிப்பாக, வெண்ணாறு மற்றும் கல்லணை கால்வாய் பகுதியிலும், காவிரி வடிநிலப் பகுதியில் வாய்க்காலின் கடைமடைப் பகுதியிலும் நேரடி நெல் விதைப்பு செய்வதே சிறந்தது.

நேரடி நெல் விதைப்பு செய்வதால் நாற்றங்கால் மற்றும் நடவு வயல் தயாரிக்க தேவைப்படும் நீரின் அளவு குறைவதால் மொத்த நீர்த் தேவையில் 25 சதம் குறைய வாய்ப்பு உள்ளது.

நிலத்தடி நீர் உள்ள விவசாயிகள் அனைவரும் ஆற்றுநீர் வயலை வந்தடைந்தவுடன் நடவு செய்ய வசதியாக செப்டம்பர் முதல் வாரம் வரை நீண்ட கால ரகங்களையும், செப்டம்பர் முதல் வாரத்திற்கு பிறகு மத்திய கால ரகங்களையும் கொண்டு சக விவசாயிகளுக்கும் உதவிடும் வண்ணம் பரந்த அளவில் சமுதாய நாற்றங்கால் அமைத்து உதவிடலாம்.

எனவே, எங்கெங்கு வாய்பபு இருக்கின்றதோ அங்கு உடனடியாக நேரடி நெல் விதைப்பு செய்தும், நிலத்தடி நீர் வசதியுள்ள மற்ற இடங்களில் நாற்றங்கால் அமைத்து நடவு செய்தும் சம்பா சாகுபடியில் குறைபாடு இல்லாமல் மேற்கொண்டு அதிக மகசூல் பெற்றிட வேண்டும் என்றார் அவர்.

மேட்டூர் அணை நீர்மட்டம்: 76.77 அடி

First Published : 04 Sep 2012 12:24:46 PM IST

தஞ்சாவூர், செப். 3: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 76.77 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3,174 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 2,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

விவசாயிகள் கவனத்துக்கு...

First Published : 04 Sep 2012 12:26:59 PM IST

திருவாரூர், செப். 3: தமிழக அரசின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் செய்திக் குறிப்பு: உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக உள்ளவரின் மகன் அல்லது மகளின் பள்ளிக் கல்வித் தவிர மற்ற அனைத்து வகையான படிப்புகளுக்கும் கல்வித் தகுதிக்கேற்ப ரூ.1,250 முதல் ரூ. 6,750 வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது.

உழவர் பாதுகாப்புத் திட்ட கல்வி உதவித்தொகை பெற்றாலும் கல்லூரிகளில் வழங்கப்படும் உதவித் தொகையையும் சேர்த்து பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தில் திருமண உதவித்தொகை ஆண்களுக்கு ரூ. 8,000, பெண்களுக்கு ரூ. 10,000 வழங்கப்படுகிறது. சிகப்பு நிற அட்டைபெற்ற ஆதரவற்ற உறுப்பினருக்கு மாத ஓய்வூதியம் ரூ.1,000. உறுப்பினராக உள்ளவர் விபத்தில் உயிரிழந்தால் குடும்பத்துக்கு ரூ. 1 லட்சம், ஈமச்சடங்கு செலவுக்கு ரூ. 2,500.

விபத்தில் இரு கைகள் அல்லது இரு கால்கள் அல்லது மீட்கமுடியாத அளவுக்கு கண்கள் இரண்டும் பார்வையிழப்பு ஏற்பட்டால் ரூ. 1 லட்சம். விபத்தினால் ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது பக்கவாதம் ஆகிய இழப்புகளுக்கு ரூ. 50,000. விபத்தினால் கடுமையான காயங்கள் ஏற்பட்டால் ரூ.20,000 வழங்கப்படுகிறது.

இயற்கையாக உயிரிழந்தால் ரூ. 10,000, ஈமச்சடங்கு செலவு ரூ. 2,500 குடும்பத்துக்கு வழங்கப்படும். உதவித்தொகைப் பெற தொடர்புடைய தனி வட்டாட்சியரிடம் (சமூகப்பாதுகாப்புத் திட்டம்) விண்ணப்பிக்க வேண்டும்.

## பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ. 4.99 கோடி ஊக்கத் தொகை

First Published : 04 Sep 2012 12:27:47 PM IST

திருச்சி, செப். 3: திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் சார்பில் 2010-11-ம் ஆண்டில் பால் வழங்கிய 48414 பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு 50 பைசா வீதம் ரூ. 4,99,77,095.50 ஊக்கத்தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் திங்கள்கிழமை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆவின் பொதுமேலாளர் இரா. நடராஜன், துணைப் பதிவாளர் (பால்வளம்) எம். முத்துக்கிருஷ்ணன் ஆகியோரும் பங்கேற்றனர்.

திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் கீழ் செயல்படும் 701 கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து சராசரியாக நாளொன்றுக்கு 3,25,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும் 50,557 கிராமப்புற உறுப்பினர்கள் பால் வழங்கி வருகின்றனர்.

உறுப்பினர்களிடம் 73,197 பசுமாடுகளும், 7582 எருமை மாடுகளும் உள்ளன. இவற்றுக்கு சிகிச்சை அளிக்க 15 நடமாடும் கால்நடை மருத்துவத் தடங்கள் செயல்படுகின்றன. 235 செயற்கைக் கருவூட்டல் மையங்கள் செயல்படுகின்றன.

உள்ளூர் விற்பனையாக திருச்சி, பெரம்பலூர், கரூர் நகரங்களில் முகவர்கள் மூலம் 1,14,000 லிட்டர் பால் நாளொன்றுக்கு விற்பனை செய்யப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் 12 தொகுப்பு பால் குளிர்விப்பான் செயல்பட்டு வருகிறது. துறையூர் வட்டம், எரகுடி கிராமத்தில் மேலும் ஒரு குளிர்விப்பான் 5000 லிட்டர் தொகுப்பில் அமைக்கப்படவுள்ளது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

பதிவு செய்த நேரம்:2012-09-01 11:35:03

சின்னமனூர்,: சின்னமனூர் அருகே குச்சனூரில் மாவட்ட வேளாண் துறை சார்பில் விதை கிராம திட்டத்தின் கீழ், நெல் விதை உற்பத்தியில் தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு மூன்று நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் இணை இயக்குனர் கோவிந்தராஜ் துவக்கி வைத்தார். குச்சனூர் பேரூராட்சி தலைவர் ரோஜாம்மாள் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.
நெல் மகசூலுக்கான தொழில் நுட்பங்கள் குறித்து விசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. உயிர் உர வி தை நேர்த்தி, பூஞ்சாண கொல்லி விதை நேர்த்தி உள்ளிட்ட தொழில் நுட்பங்கள் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டன.
மண் ஆய்வு முடிவுகள் அடிப்படையில் மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. சின்னமனூர் வேளாண் உதவி இயக்குனர் அழகுநாகேந்திரன், வேளாண் அலுவலர்கள் இளம்பூரனார், முருகேசன், துணை வேளாண் அலுவலர் புகழேந்தி, விவசாயிகள் கலந்து கொண்டனர்.
பயிற்சிக்கான ஏற்பாடுகளை சின்னமனூர் உதவி வேளாண் அலுவலர்கள் சண்முகன், சிவக்குமார், ஜானகிராமன், பன்னீர்செல்வம், தமிழ்செல்வி செய்திருந்தனர்.

## குறுவை பாதித்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ15 ஆயிரம் நிவாரணம் வேண்டும்

பதிவு செய்த நேரம்:2012-09-04 10:11:30

நாகை, : நாகை மாவட்ட காங்கிரஸ் விவசாய பிரிவு தலைவர் ராமலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:
ஜூனில் காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படாததால் தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய 3 மாவட்டங்களில் நான்கரை லட்சம் ஏக்கரில் நடைபெற வேண்டிய குறுவை சாகுபடி, சுமார் 1 லட்சம் ஏக்கரில் மட்டுமே நடந்துள்ளது. வரும் 17 ம் தேதி திறந்து விடப்படும் தண்ணீர் நாகை மாவட்டத்தை வந்தடைய அக்டோபர் முதல் வாரம் ஆகும். அதன்பின்னர் சம்பா சாகுபடி செய்வது சாத்தியமில்லை. குறுவை சாகுபடி இல்லாததால் விவசாயிகள் உற்பத்தி இல்லாமலும், விவசாய தொழிலாளர்கள் வேலை இல்லாமலும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, வறுமையில் வாடும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும்,

விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு தலா ரூ.10 ஆயிரமும் வழங்க அரசு நிவாரணம் வழங்க வேண்டும்.

மேலும் 100 வேலைக்கு அரசு நிர்ணயித்துள்ள கூலியை குறைக்காமல் வழங்க வேண்டும். குடிநீர் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவித்து வறட்சி நிவாரணப் பணிகளை அரசு உடனடியாக துவங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.